அளித்திருக்கிறது. தமிழகத்தின் முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் இன்றையதினம் தமிழகத்திலே எந்தப் பகுதியிலும் போக்குவரத்து வசதியே இல்லை என்ற ஒரு குறை இருக்கக்கூடாது என்று சொல்லியிருக்கிற சூழ்நிலையில், ஆயிரம் பேர் மக்கள் தொகை இருந்தால், 35 கிலோ மீட்டருக்குள்ளாக இருந்தால் அந்தப் பகுதிக்கு நகரப் பேருந்து வசதி கண்டிப்பாக செய்து தரப்படும் என்ற ஒரு ஆணையை அறிவித்திருக்கிறார்கள். இந்த நிலையில் ரெட்டிப்பாளையம் பகுதி 1,000 பேருக்கு மேலாகவும் 35 கிலோமீட்டருக்குள்ளாகவும் இருப்பதால் அந்தப் பகுதிக்கு பேருந்து விட அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்து, அங்கே நகரப் பேருந்து போக்குவரத்து நடக்க ஆவன செய்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட இடம் செங்கல்பட்டு—எம். ஜி. ஆர். மாவட்டம் வடக்குப்பட்டியிலிருந்து அந்தப் பகுதிக்கு 10 நடைகள் பேருந்துகள் இயக்கப்படுகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ம. தனபால்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பகுதிக்கு ஒரே ஒரு பேருந்துதான் சென்றுகொண்டிருக்கிறது. ஆனால் அந்தப் பகுதியைச் சுற்றியுள்ள பல கிராமங்களில் இருக்கும் மக்கள் ரெட்டிப்பாளையத்திற்கு, கிட்டத்தட்ட குருவன்மேட்டிலிருந்து 3–4 கிலோ மீட்டருக்கு அப்பால் இருப்பதால், அங்கேயிருந்து நடந்து சென்றுதான் பஸ் ஏறுகின்ற சூழ்நிலை இருக்கிறது. அந்த நிலைமையைப் போக்க அந்தப் பகுதிக்கு போக்குவரத்து வசதிகளைச் செய்துதர ஆவன செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ரெட்டிப்பாளையம் 1,000 மக்கள் தொகைக்கு மேல் இருப்பதாகக் குறிப்பிட்டார்கள். அதற்கு இப்போது பேருந்து இருக்கிறது. ஆகவே மீண்டும் பேருந்துகள் விடப்பட அரசிடம் உத்தேசம் ஏதும் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 85. டாக்டர் ச. சுந்தரராஜ் —மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

85—

மானாமதுரைக்கு சூசையப்பர்பட்டி வழியாக நகரப்பேருந்து.

* 1203 டாக்டர். எஸ். சுந்தரராஜ் :

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) பரமக்குடியிலிருந்து மானாமதுரைக்கு சூசையப்பர்பட்டி வழியாக நகரப்பேருந்து விடப்படுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

முற்பகல் 10-05

டாக்டர் ச. சுந்தரராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி ஆட்சிக் காலத்தில் கிராம மக்களுக்கு வேண்டிய அடிப்படை வசதிகளைச் செய்து கொடுக்க முன்னுரிமை அளிக்கப் பட்டு கிராம மக்களின் நலனை பாதுகாத்து வருகிறார்கள். கீழபார்த்தனூர், வடக்கூர், சூடியூர், சூசையப்பர்பட்டி, கரிசல் குளம் ஆகிய கிராமங்களில் உள்ள மக்கள் பேருந்துகளில் ஏறிச் செல்வதற்கு, பள்ளி மாணவ மாணவியர்கள் பள்ளிக்குச் செல்ல, வியாதியஸ்தர்கள் மற்றும் கர்ப்பிணி பெண்கள் மருத்துவமனைக்கு செல்லவும், பயணிகள் தங்களுடைய குறிப்பிட்ட இடங்களுக்குச் செல்லவும், கருணை உள்ளம் கொண்ட மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிக் காலத்தில் முக்கியத்துவம் கொடுத்து பேருந்துகளை விட அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சூசையப்பர்பட்டியைப் பற்றி குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறார்கள். அங்கே ஜீப் கூட செல்ல முடியாத குறுகிய பாதைகளாக அங்கே பாதைகள் இருக்கின்றன. பாதைகளின் குறுக்கே பாலம் இருக்கிறது. அந்தப் பாலமும் பழுதடைந்திருக்கிற காரணத்தால், அங்கே இப்போது பேருந்துகளை இயக்கும் சாத்தியக்கூறு இல்லை.

டாக்டர் ச. சுந்தரராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு முறையும் கேட்கும்போது, பாலம் கட்டப் படவில்லை, சாலைகள் போடப்படவில்லை என்று பல்வேறு காரணங்களைச் சொல்லி வருகிறார்கள். அந்தக் கிராமத்து மக்கள் தங்களுடைய பகுதிகளிலிருந்து மற்ற நகரப் பகுதிகளுக்குத் தொடர்பு கொள்ள கிட்டத்தட்ட நான்கு கிலோமீட்டர் செல்ல வேண்டியிருக்கிறது. மறு பக்கத்திலே ஐந்து கிலோமீட்டர் நடந்து செல்ல வேண்டிய நிலை இருக்கிறது. அவ்வாறு நடந்துசென்றாலும்கூட தூர வேகப் பேருந்துகள் அங்கே நின்று அவர்களை ஏற்றிச் செல்ல மறுக்கின்றன. ஆகவே அவர்களுடைய உடனடித் தேவைகளை முன்னிட்டு....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒரு குறிப்பிட்ட பகுதியில் விட வேண்டிய பஸ் பற்றி சொல்லுகிறார்கள். இதிலே மற்ற பஸ்களைப் பற்றிய கேள்வி வராது.

1991 செப்டம்பர் 26]

டாக்டர் ச. சுந்தரராஜ்: அந்த ஊர் வழியாகச் செல்வதால் சொல்லுகிறேன். ஆகவே அந்த தூர வேகப் பேருந்துகள் அந்தக் கிராமங்களில் கிராம மக்கள் நிற்கிற இடத்திலே நின்று, அவர்களை ஏற்றிக்கொண்டு வருவதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம், புரட்சித் தலைவி ஆட்சியில், பேருந்துகள் எந்தெந்த பகுதிகளில் எங்கெங்கு நிறுத்தப்பட வேண்டுமென்று கருதுகிறார்களோ, அந்த இடங்களையெல்லாம் குறிப்பிட்டுக் காட்டினால் பேருந்துகள் நிறுத்தி பொது மக்களை அதிலே ஏற்றிக் கொண்டு வருவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 86—திரு. எஸ். எஸ். ராமசுப்பு—மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்.

86—

கீழப்பாவூர் வட்டத்தில் கூட்டுக்குடிநீர்த் திட்டம்.

* 89. திரு. எஸ். எஸ். ராமசுப்பு:
மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர், கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) ஆலங்குளம் தொகுதி, கீழப்பாவூர் வட்டாரத்தைச் சேர்ந்த அதிசயபுரம், ராஜகோபாலபேரி, ராமனூர், கலிங்கப்பட்டி முதலிய ஊர்களை இணைத்து கூட்டுக் குடிநீர்த் திட்டம் ஏற்படுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது அத்திட்டம் நிறைவேற்றப் படும்?

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): திட்டம் ஏதும் நடப்பு நிதியாண்டில் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். எஸ். ராமசுப்பு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கீழ்ப்பாவூர் வட்டாரத்தைச் சேர்ந்த அதிசயபுரம், ராஜகோபாலபேரி, ராமனூர், கலிங்கப்பட்டி முதலிய நான்கு கிராமங்களும் வி. கே. புதூர் ஊராட்சிக்கு உட்பட்டக் கிராமங்களாகும். ஆனால் வி. கே. புதூருக்கு அருகில் சிற்றாறு